புதிய அவையம்
PUTHIYA AVAIYAM (PEER- REVIEWED JOURNAL)
ISSN : 2456-821X
(vol. 9 Issue: 01 June 2025)

================================================================

# பண்டைத் தமிழர்களின் நடுகல் வழிபாடு

================================================================

முனைவர் ஆ. பிரபு
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை
தூய நெஞ்சக் கல்லூரி தன்னாட்சி
திருப்பத்தூர் - 635 601
திருப்பத்தூர் மாவட்டம்

பா ரம்யா
முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
322PHD241F268TAM
தமிழ்த்துறை
தூய நெஞ்சக் கல்லூரி தன்னாட்சி
திருப்பத்தூர் - 635 601
திருப்பத்தூர் மாவட்டம்

(திருவள்ளுவர் பல்கலைக்கழக இணைவு பெற்றது )

**ஆய்வுச் சுருக்கம்**

பண்டைத் தமிழரின் வாழ்வியல் பதிவுகளை இவ்வுலகிற்கு உணர்த்திடும் சான்றுகளில் நடுகற்களின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். தமிழகம் மட்டுமின்றி இந்தியா முழுவதும் நடு கற்கள் ஆங்காங்கே கண்டறியப்பட்டு விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நடுகல் என்பது வெறும் அல்ல அது மக்களது நம்பிக்கை நன்றியின் வெளிபாடு, வீரத்திற்கான வெகுமதி என்றே குறிப்பிட வேண்டும். தொல் தமிழர் தம் பண்பாட்டின் வெளிப்பாடே நடுகல் நாட்டும் வழக்கமாகும். தமிழர்களின் அறக்கோட்பாட்டிற்குச் சான்று பகிர்வதிலும் இது முக்கியப் பங்காற்றுகிறது.

**முன்னுரை**

தமிழரின் சிறப்பையும் பண்பாட்டுக் கூறுகளையும் மக்களுக்கு எடுத்துரைப்பவை சங்க இலக்கியங்களாகும். மேலும் தமிழரின் வரலாற்றோடு தொடர்புடைய நினைவு சின்னங்களும் தமிழரின் வீரத்தையும் வரலாற்றுப் பதிவுகளையும் காட்டும் சான்றுகளில் முதன்மை பெற்றவையாகும். செவ்வியல் காலகட்டத்தில் போரில் வீர மரணம் அடைந்த வீரனை நினைவு கூறும் விதமாக நடுகல் அமைத்து வழிபடுவது தமிழரின் மரபாக இருந்துள்ளது, என்பதை இக்கட்டுரை நிறுவுகின்றது.

**நடுகல்**

நடுகல் நடுவதில் ஆறு நிலைகளை இருப்பதாக தொல்காப்பியம் சுட்டுகிறது.

"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்

சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தல் என்று

இருமூன்று வகையிற் கல்லொடு புணர" (தொல் பொருள்.63)

இறந்துபட்ட வீரர்களின் நினைவாக நடுகல் நடுவதற்கு கல்லைப் பார்த்தல், பார்த்த கல்லை எடுத்துக் கொண்டு வருதல், அதனை புனித நீரால் நீராட்டுதல், பின்னர் அக்கல்லினை நட்டு வைத்தல், கோயிலாக எழுப்பி அக்கல்லில் வீரனின் பெயரும், சாகசங்களையும் எழுதி கல்லினைத் தெய்வமாக்கிப் போற்றி வாழ்த்துதல் என ஆறு நிலைகளாக குறிப்பிடுகிறது. கல்லினை நட்டு அதனை வழிபடும் வழக்கத்தினைப் பண்டைக்காலத் தமிழர்கள் மேற்கொண்டிருந்தனர் என்பதையும், பொதுவாக போரில் இறந்த வீரர்களே இவ்வாறு நடுகல்லாக ஆனார்கள் என்பதையும் நம்மால்அறியமுடிகிறது.

**நடுகல் வழிபாடும் சமூகமும்**

போரில் இறந்த வீரர்களின் நினைவைப் போற்றுதல் மட்டுமன்று நடுகல் வழிபாட்டின் நோக்கம் வீரம் செறிந்த வரலாற்றினைப் பிற்காலத் தலைறையினர் உணர்வதற்கும் நடுகல் வழிபாடு வலியுறுத்தப்பட்டது. நடுகல் வழிபாடல்லது வேறு தெய்வ வழிபாடு தேவையில்லை என்பதாக, மாங்குடிக்கிழார் கூறுவதைக் காணலாம். புலவர் பூ, உணவு, குடி ஆகியவற்றைக் கூறும் போது தெய்வ வழிபாட்டையும் இணைத்துக் கொள்கிறார். ஒரு சமூகத்தில் இந்நான்கும் இன்றியமையாதனவாக இருந்திருக்கின்றன என்பதையும் அவரது பாடல் வெளிப்படுத்துகிறது.

"ஒன்னாத் தெவ்வர் முன்நின்று விலங்கி
ஒளிறு ஏத்து மருப்பின் களிறு எறிந்து வீழ்ந்ததென
கல்லே பரவின் அல்லது
நெல் உகுத்துப் பரவும் கடவுளும் இலவே" (புறம்.335)

என்ற பாடலில் பகைவரோடு போர்முனையில் போரிட்டு யானைகளைக் கொன்று இறந்தவனுக்கு வைக்கப்பட்டுள்ள நடுகல்லைத் தெய்வமாக வணங்குவதை விடவும் வேறு தெய்வம் இவ்வூரில் இல்லை என்று கூறப்படுகிறது.

**நடு கல்லை வீரர்கள் வழிபடுதல்**

போரில் ஈடுபடும் வீரர்கள் தமக்கு முன்னர் இறந்துபட்ட வீரர்களை வழிபடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். வெட்சி வீரர்கள், போர்முனையில் கரந்தை வீரர்களை வென்று ஆநிரைகளைக் கவர்ந்து வந்தனர். பின்பு மேட்டு நிலத்தில் வெட்சியாரை வென்று அவர்கள் கவர்ந்து சென்ற ஆநிரைகளைக் மீட்டு வந்தனர். தம் வலிமைக்குக் காரணமாக அவர்கள் நம்பும் குன்றில் மேலுள்ள நடுகல் தெய்வத்தை வழிபடுவதற்காக அதன் மேல் மயிற்பீலியைச் சூட்டினர். துடியை இசைத்து நெல்லால் செய்த கள்ளினைக் குடித்து ஆட்டினைப் பலிகொடுத்து வழிபட்டனர் என்பதை,

"நுழைநுதி நெடுவேல் குறும் படை மழவர்
முனை ஆத் தந்து முரம்பின் வீழ்த்த
வல் ஆண் பதுக்கைக் கடவுட் பேண்மார்
நடுகல் பீலி சூட்டி துடிப்படுத்து
தோப்பிக் கள்ளொடு துரூஉப் பலி கொடுக்கும்
போக்கு அருங் கவலைய புலவு நாறு அருஞ்சுரம்" (அகம்.35)

பண்டையத் தமிழர்கள் போரில் ஈடுபட்டு இறந்த வீரர்களுக்கு நடுகல் எடுத்து வழிபட்டமையை மேற்கண்ட பாடல் வாயிலாக அறியமுடிகிறது. அதிலும் போரில் ஈடுபடும் வீரர்கள் தமக்கு வலிமையை நடுகற்கள் கொடுப்பதாக நம்பி அவற்றை வழிபட்டனர். இவ்வழிபாட்டு நிகழ்வில் ஆட்டினை அறுத்துக் குருதிப்பலி கொடுப்பதையும் வழக்கமாகக் கொண்டனர் என்பதையும் இப்பாடலில் அறியமுடிகிறது.

"நீர் அற வறந்த நிரம்பா நீள் இடை
வள் எயிற்றுச் செந்நாய் வருந்து பசிப் பிணவோடு
கள்ளி அம் காட்ட கடத்திடை உழிஞ்சில்
உள் ஊன் வாடிய கரி மூக்கு நொள்ளை
பொரி அரை புதைத்த புலம்புகொள் இயவின்
விழுத்தொடை மறவர் வில் இட வீழ்ந்தோர்
எழுத்துடை நடுகல் இன் நிழல் வதியும்
அருஞ்சுரக் கவலை நீந்தி என்றும்" (அகம் 53)

மேற்கண்ட நடுகல்லினை நடும் போது அதில் எழுதப்படும் எழுத்துக்கள் பற்றி கூறுகின்றது. வில்லில் இருந்து எய்யப்படும் அம்பானது தவறாமல் தாக்கிக் கொன்ற வீரர்களுக்கு நடுகல் எழுப்பப்பட்டு அவர்தம் பெயரும் பீடும் எழுதப்பட்டு, நடப்பட்டிருக்கும். அதன் நிழலிலே செந்நாய் தங்கியிருக்கும் என்று கூறப்படுகிறது. இதில் நடுகல் நடப்படும் போது வீரரின் பெயரும் அவரது வீரதீரச் செயல்களும் பொறிக்கப்பட்டிருக்கும் எனக் கூறப்படுகிறது. இதுபோல,

"நல் அமர்க் கடந்த நாணுடை மறவர்
பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல்
வேல் ஊன்று பலகை வேற்று முனை கடுக்கும்
மொழிபெயர் தேஎம் தருமார் மன்னர்
கழிப் பிணிக் கறைத் தோல் நிரை கண்டன்ன
உவல் இடு பதுக்கை ஆள் உகு பறந்தலை" (அகம்.67)

என்னும் பாடலில் நடுகற்களின் காட்சியானது போர் வீரர்கள் நிற்பது போன்று காணப்பட்டதை விளக்குகிறது. கரந்தை வீரர்கள் அரம் கொண்டு ராவப்பட்ட முனையுடன் கூடிய அம்புகளைக் கொண்டு, குறிபார்த்து எய்யும் திறன் படைத்தவர்கள். அவர்கள் பருக்கைக் கற்கள் உள்ள மேட்டு நிலத்தில் நெல்லி மரங்களின் இடையில் நின்று, ஆநிரைகளை மீட்க வெட்சி வீரர்களுடன் போரிட்டு வீர மரணம் அடைந்தனர். அவர்களுக்காக நாட்டப்பட்ட நடுகற்களில் அவர்களின் பெயர்களும், அவர்கள் செய்த வீர தீரச் செயல்களும் பொறிக்கப்பட்டிருக்கும். அந்நடுகற்களின் முன் வேல் நாட்டப்பட்டு மயிற்பீலியுடன் காட்சியளிப்பது வீரர்களே நிற்பது போன்று காணப்படும் எனக் கூறப்படுகிறது. பெயரும் பீடும் எழுதிய

நடுகற்கள் இருக்கும் காட்டில் அந்நடுகற்கள் போர்வீரர்களைப் போன்று நிற்பதை பிறிதொரு பாடலும் குறிப்பிடுகிறது.

“வீளை அம்பின் விழுத்தொடை மழவர்
நாள்ஆ உய்த்த நாமவெஞ் சுரத்து
நடைமெலிந்து ஒழிந்த சேண்படர் கன்றின்
கடைமணி உகுநீர் துடைத்த ஆடவர்
பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல்
வேல் ஊன்று பலகை வேற்றுமனை கடுக்கும்” (அகம் 131)

போரில் மடிந்த வீரர்களுக்குப் பெயரும் பீடும் எழுதிய நடுகற்கள் நடப்பட்டுள்ளமையை இப்பாடல் வெளிக்காட்டுகிறது. அப்போரில் இறந்துபட்ட வீரர்களுக்கு நடுகல் நாட்டி அவர்களது பெயரும் வீர தீரச்செயல்களையும் எழுதினர். அந்நடுகற்களானது பகைவர்க்கு வீரர்கள் நிற்பது போன்று அச்சத்தைத் தரும் என்று கூறப்படுகிறது.

**முடிவுரை**

செவ்வியல் காலத் பண்டையத் தமிழகத்தில் வாழ்ந்த மக்கள் நடுகல் வழிபாட்டின் போது வேண்டுதல் செய்து கொண்டனர். போர் வீரர்களின் மனைவிகள் நடுகல்லை வழிபட்டுத் தம் கணவன் சென்றிருக்கும் போர்ச் செயலை வெற்றிகரமாக நடைபெற உறுதுணையாக இருக்க வேண்டும் என வேண்டிக்கொண்டனர் என்பதையும் காணமுடிகிறது. தொல் தமிழர் தம் பண்பாட்டின் வெளிப்பாடே நடுகல் நாட்டும் வழக்கமாகும் என்பதை இக்கட்டுரையின் வழியாக அறியமுடிகின்றது.

**துணைநூல்பட்டியல்:**


1. முனைவர் ஆ. பிரபு, தொல்லியல் வரலாற்றியல் - ஓர் அறிமுகம்
2. புலியூர்க் கேசிகன், அகநானூறு மூலமும் உரையும்
3. புலியூர்க் கேசிகன், புறநானூறு மூலமும் உரையும்